தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்
நிர்வாகக் கிளை

அனுப்புநர்
பொறிஞர். தெ. ரவிச்சந்திரன், பி.இ.,
தலைமைப் பொறியாளர்/பணியமைப்பு,
144, அண்ணாசாலை,
சென்னை- 600 002.

பெறுநர்
மேற்பார்வைப் பொறியாளர்கள்:-
1. விழுப்புரம் மின் பகிர்மான வட்டம்
2. ஈரோடு மின் பகிர்மான வட்டம்
3. நாமக்கல் மின் பகிர்மான வட்டம்
4. உடுமலைப்பேட்டை மின் பகிர்மான வட்டம்.
5. நாகை மின் பகிர்மான வட்டம்
6. இராமநாதபுரம் மின் பகிர்மான வட்டம்.
7. திருநெல்வேலி மின் பகிர்மான வட்டம்
8. உற்பத்தி வட்டம்/ஈரோடு
9. வட சென்னை அனல் மின் நிலையம்-1.
10. கருவி காத்தலும் தகவல் தொடர்பும்/கோவை

கடித எண்.042417/199/ஜி.46/ஜி.462/2019-3, நாள். 11.01.2021.

ஐயா,

பொருள்: நிர்வாகம் - மூன்றாம் பணி நிலை – களப்பணியாளர்களின் பதவி உயர்வு தீர்விற்குரிய மாதம் (Crucial Month) அடிப்படையில் வழங்குவது குறித்து – அறிவுறுத்துவது – தொடர்பாக.

பார்வை:
1. B.P.Ms(CH) No.212 (Secretary Branch) dt.12.06.1987.
2. Secretary's Memo No.87393-P1/87-2 (Secretariat Brach) dt.09.11.1987.
3. இவ்வலுவலகக் கடித எண்.042417/199/ஜி.46/ஜி.462/2019-2, நாள் 23.07.2019.

------

பார்வை (1) மற்றும் (2)-ன் வாயிலாக வாரியத்தில் பணிபுரியும் பணியாளர்களின் பதவி உயர்வினை வழங்குவதற்கான வழிகாட்டல் (அதாவது) காலிப் பணியிடங்களை மதிப்பிட்டு (Estimation of vacancies) தீர்விற்குரிய மாதத்தினை (Crucial month) அடிப்படையாக கொண்டு தயார் செய்து களப்பணியாளர்களின் தகுதிகாண் அறிக்கை கோரப்படவேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

--2

Scanned with CamScanner

2) ஆனால், சில வட்டங்களில் களப்பணியாளர்களின் பதவி உயர்வு என்பது தீர்விற்குரிய மாதத்தின் (Crucial Month) அடிப்படையில் தேர்வு பட்டியல் தயார் செய்யாமல் பதவி உயர்வு வழங்குவதாக சில சங்கங்கள் அளித்த கோரிக்கையின்படி அனைத்து மேற்பார்வை பொறியாளர்களுக்கும், களப்பணியாளர்களின் பதவி உயர்வின்போது கட்டாயமாக மேற்கண்ட வாரிய உத்தரவான (1) மற்றும் (2)-ஐ பின்பற்றி தேர்வு பட்டியல் (Panel list) தயார் செய்யப்படவேண்டுமென பார்வை (3)-ன் வாயிலாக அறிவுறுத்தப்பட்டது.

3) இருப்பினும், மேற்குறித்த 10 (பத்து) மின் பகிர்மான வட்டங்களில் பார்வை (1) மற்றும் (2)-ன் வாயிலாக வழங்கப்பட்ட உத்தரவுகளை பின்பற்றாமல் பதவி உயர்வு அளிக்கப்பட்டுள்ளது தெரியவருவதால், இனிவரும் காலங்களில் களப்பணியாளர்களின் பதவி உயாவின் போது மேற்கண்ட உத்தரவுகனை தவறாமல் பின்பற்றி பதவி உயர்வு வழங்குமாறு மீண்டும் அறிவுறுத்தப்படுகிறது.

தங்கள் உண்மையுள்ள,

ஒப்பம்*** நாள்.11.01.2021.
(ஆ.நா.ந. அமுதா),
முதுநிலை பணித்தொகுதி அலுவலர்/தொழிலாளர்,
தலைமை பொறியாளர்/பணியமைப்புக்காக.

நகல்:- <u>தலைமைப் பொறியாளர்கள்/பகிர்மானம்</u>:-

(1) விழுப்புரம் மண்டலம், (2) ஈரோடு மண்டலம், (3) கோவை மண்டலம், (4) திருச்சி மண்டலம், (5) மதுரை மண்டலம், (6) திருநெல்வேலி மண்டலம், (7) தலைமை பொறியாளர்/வட சென்னை அனல் மின் நிலையம், (8) தலைமை பொறியாளர்/புனல்/சென்னை, (10) தலைமை பொறியாளர்/கருவி காத்தலும் தகவல் தொடர்பும்/சென்னை.

நகல்:- இருப்புக்கோப்பு.

Scanned with CamScanner